# ஏழாவது அறிவு



இரா. விஜயகுமாரன்

# ஏழாவது அறிவு

**இரா.விஜயகுமாரன்**

This edition first published on March, 2013 by Kumar Publications

R.Vijayakumaran has asserted his right to be identified as the author of this Work in accordance with Indian Copyright Law.

Copyright © R.Vijayakumaran. All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without the prior permission of the copyright owner.

www.vijayakumaran.in

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | 4 |
| முன்னுரை | 8 |
| உன்னைச் சுற்றித்தான் உன் வாழ்க்கை... | 9 |
| காதல் | 14 |

# அணிந்துரை

இந்தச் சிறிய நூலை ஒரே மூச்சில் படித்து முடித்தவுடன், மனத்தில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. எது உண்மையான காதல், எது அறிவு, எது ஏழாம் அறிவு என்பனவற்றைத் தெளிவாக இச்சிறிய நூலிலே விளக்கியிருப்பது மெய்சிலிக்க வைக்கிறது

"ஒழுக்கமான சமுதாயத்தில்தான் அமைதியிருக்கும்" என்று முடித்திருக்கும் ஆசிரியர் திரு இரா. விஜயகுமாரன், இளைஞர்களின் மனத்தில் விழிப்புணர்வைத் தோற்றுவிக்க வேண்டும் என்று செயல்பட்டிருக்கிறார்.

ஏழாம் அறிவு என்னும் இந்நூல் அனைவரையும் எட்டவேண்டும், ஆழ்ந்த கருத்துடைய இச்சிறிய நூலை ஆக்கிய ஆசிரியருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

**முனைவர் வெ.தி.சந்திரசேகரன்**
**முதல்வர்,**
**ஜவகர் அறிவியர் கல்லூரி,**
**நெய்வேலி.**

விஞ்ஞான வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி மற்றும் கலாச்சாரம் மனிதனை மாற்றி சிந்திக்க வைக்கிறது. ஒரு காலத்தில் தவறு என்று கருதப்படுவது தற்போது சரி என்ற நிலைக்கு மாறிவிட்டதால் ஆறாம் அறிவு மட்டும் போதாது, ஏழாவது அறிவு வேண்டும் என்ற புதிய கோணத்தில் சிந்திக்கிறார் இந்நூலின் ஆசிரியர். அறிவை அறிவால் வழிநடத்தப்பட வேண்டும் என்கிறார்.

நீரும் நல்லதுதான், மண்ணும் நல்லதுதான், ஆனால் தவறாக இணையும்போது சேறாக ஆவதுபோல் நல்லவரும் கூட தவறான சகவாசத்தால் தவறக்கூடிய எதார்த்தத்தை உதாரணத்துடன் விளக்கியுள்ளார். "காதல்" பற்றி தன் வித்தியாச கோணத்தில் சிந்தித்து புதிய அர்த்தத்தை கொடுக்கிறார். இரு வரி கவிதைப் போன்று அமைந்திருப்பதில் ஆசிரியரை பாராட்டுகிறோம். வாசிப்போர் ஏழாவது அறிவால் மேம்பட வாழ்த்துகிறோம்.

**அன்புடன்**
**அருள்தந்தை அருள்நாதன்,**
**முதல்வர்**
**புனிதபால் மேல்நிலைப்பள்ளி,**
**நெய்வேலி.**

அறிவு என்பது கல்வியாலும், அனுபவத்தாலும் நமக்குக் கிடைக்கிறது.  அறிவுக்கு எதைத் தெரியப்படுத்த வேண்டும் எதைத் தெரியப்படுத்தக்கூடாது. என்பதை அறிந்து, அறிவை, அறிவால் நெறிப்படுத்துவதே ஏழாம் அறிவு,

மிருகமாக இருந்த மனிதனை பகுத்தறிவு உள்ளவனாக மாற்றியது நாகரிகக் காதல்தான்.

நாகரிகக் காதல் என்பது அறிவில் தொடங்கி உணர்வில் முடியும், கண்டதும் காதல் என்பது எப்படி பகுத்தறிவுச் செயலாக இருக்க முடியும்.

ஒருவன் ஒருத்தியைத்தான் காதலிக்க வேண்டும் என்பது சமுதாயத்தின் ஒழுக்கம்.

மேற்கண்ட ஆசிரியர் கருத்துகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

**சொல்லேருழவர் சோழன்**
**தாகூர் மேல்நிலைப் பள்ளி,**
**நெய்வேலி.**

"ஏழாவது அறிவு" என்னும் இச்சிறிய நூல் அனைவரது சிந்தனையைத் தூண்டி விடும் சிறந்த நூலாகும். ஆசிரியர் இரா. விஜயகுமாரன் அவர்கள் இந்நூலில், "உங்களுடைய அறிவு என்ன சொல்லுகிறதோ, அப்படிதான் உங்கள் வாழ்க்கை அமையும் உலக அனுபவமே உங்கள் அறிவு. எனவே அறிவை அறிவால் ஆளும் வழிமுறையைத் தேடுங்கள்" என்று கூறி வழிமுறைகளைக் கூறியுள்ளார். இவை நம் சிந்தனையைத் தூண்டும் தேன் துளிகளாக உள்ளன.

மேலும் "ஒழுக்கம் என்பது ஓட்டை இல்லாப் பானை" அதில் கல்வி என்னும் குடிநீரைச் சேமிக்க வேண்டும். ஒழுக்கம் இல்லாமல் நாம் எவ்வளவு பெரிய கல்வியைக் கற்றாலும் அது யாருக்கும் பயன்படாது என்னும் கருத்தும் ஏற்புடையதாக உள்ளது.

இதுபோன்ற நம் சிந்தனையைத் தூண்டும் சீறிய கருத்துகளை உள்ளடக்கிய இந்நூல், அறியாமையாகிய அக இருளைப் போக்கும் சிறந்த நூலாகும். இளைய சமுதாயத்தை வழி நடத்த வந்த இந்நூலை எழுதிய ஆசிரியரை மனதார வாழ்த்துகிறேன்.

**கா. மருதாத்தாள்**
**முதல்வர்,**
**ஜவகர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,**
**நெய்வேலி.**

# முன்னுரை

மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் சரியான வழிகாட்டுதல் இல்லாததால் வாழ்க்கையைத் துன்பத்துக்கு உள்ளாக்கிக் கொள்கிறார்கள். இதைப் பார்த்து பொறுத்துக்கொள்ள முடியாமல் நான் எழுதிய "உன் செயலுக்கு நீ காரணம் அல்ல" என்ற புத்தகத்தில் இருந்து ஒரு பகுதியை மட்டும் எடுத்து இதில் எழுதி இருக்கின்றேன். ஒருவன் பார்க்கின்ற காட்சிகளும், கேட்கின்ற செய்திகளும் தான் அவனுடைய அறிவாக அவனுக்குள் உள்ளது. அந்த அறிவு தான் அவனை வழி நடத்துகின்றது. அறிவை அறிவால் ஆளுவதுதான் ஏழாவது அறிவு என்ற உண்மையை அறிவியல் பூர்வமாக உலகத்திற்கு புரியவைத்த முதல் புத்தகம் இதுவாகத்தான் இருக்கும் என்று எண்ணுகின்றேன். சமுதாயத்தில் முக்கிய பிரமுகர்களில் நானும் ஒருவனாக இருப்பதற்கு முதல் காரணம் நான் படித்த படிப்போ அல்லது என்னிடம் உள்ள செல்வமோ அல்ல சிறுவயதில் என்னுடைய அப்பாவும், அம்மாவும் எனக்குச் சொன்ன அறிவுறையான பொய் சொல்ல கூடாது, கெட்டவருடன் பழக கூடாது என்ற அறிவுறையை நான் இதுவரை கடைபிடிப்பதுதான் காரணம் நான் எழுதிய இந்த சிறியநூல் பல மாணவர்களையும், இளைஞர்களையும் நல்ல வழிகளில் கொண்டு செல்லும் என்று நம்புகின்றேன்.

# உன்னைச் சுற்றித்தான் உன் வாழ்க்கை...

வாழ்க்கையில் நாம் சந்தோஷமாக வாழவேண்டும் என்பது உணர்வு இந்த உணர்வைப் பூர்த்தி செய்துகொள்ள அறிவு தேவைப்படுகிறது. அறிவு என்பது அனுபவத்தாலும், கல்வியாலும் நமக்குக் கிடைக்கிறது.

உணர்வு என்பது இன்பம், துன்பம், ஆசை, பொறாமை, கௌரவம், வலி, நான், பசி, இவைகள் அனைத்தும் மனிதர்களுக்கு இயல்பானவை. நாம் சுவாசிப்பது எப்படி யாரும் சொல்லிக் கொடுக்காமலே நடக்கின்றதோ அதுபோல் இந்த உணர்வுகளும் யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே நம்மைக் ஆளுகின்றன.

ஒருவனிடம் இன்பமான, கௌரவமான, வாழ்க்கை வாழ்வதற்கு ஆசைப்படு அல்லது கனவு காண் என்று சொல்வது அவசியமற்றது. ஏன்  என்றால் அது ஒவ்வொரு மனிதனின் இயல்பான உணர்வு. அந்த இன்பமான உணர்வை அவன் எப்படிப் பெறுவது, அடைவது என்பதைத் தான் நாம் மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் சொல்ல வேண்டும். இது தான் கல்வி.

வாழ்க்கையை நாம் சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காக நமது முன்னோர்கள் நமக்குப் பல கருவிகளைக் கொடுத்துள்ளார்கள் அவற்றில் மிக முக்கியமான ஒன்று கெட்டதை பார்க்காதே, கெட்டதை கேட்காதே என்று, இந்த

மிகவும் எளிமையான கருவியை பலர் அவர்கள் வாழ்க்கையில் பயன்படுத்தாதால்தான் துன்பமான, துயராமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். உயர்ந்த நிலையில் இன்பமாக வாழ்க்கையை வாழ்பவர்கள் அனைவரும் தினம் தினம் அவர்கள் வாழ்க்கையில் இந்த கருவியை பயன்படுத்திக்கொண்டுதான் இருப்பார்கள் என்பது உறுதி, அதனால் தான் அவர்கள் வாழ்வு சிறப்பாக உள்ளது. பலமுறை பெற்றோரும், ஆசிரியர்களும், மாணவர்களிடம் கெட்டவர்களிடம் பழகாதே, கெட்டதை கேட்காதே, கெட்டதை பார்க்காதே என்று சொல்லி இருந்தாலும் மாணவர்கள் பலரும் அதை ஏற்றுக் கொண்டதில்லை, காரணம் ஒவ்வொருவரும் அவர்கள் மேல் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கை தான் அதற்குக் காரணம், நான் யாருடன் பழகினாலும் என்னுடைய நிலையை நான் இழக்க மாட்டேன் என்று எண்ணுவதுதான் இதற்குக் காரணம், இப்படி இயல்பாகவே பலரும் நினைப்பது தான். ஆனால் அறிவியலின் படி அது முற்றிலும் பொய் இதை முழுமையாக நீங்கள் புரிந்து கொண்டீர்கள் என்றால் உங்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

அறிவியல் படி நான் என்று சொல்வதற்கு நமக்குச் சொந்தமாக நம்மிடம் எதுவுமே இல்லை உடலாக இருந்தாலும், அறிவாக இருந்தாலும், அனைத்தும் இது நாள் வரை வெளியில் இருந்து நாம் சேகரித்து வைத்ததுதான். இப்போது நான் என்று எண்ணுகின்றோம். பிறந்தது முதல் இதுவரை உங்களுக்குக் கிடைத்த அனுபவம் நீங்கள் பார்த்தது கேட்டதுதான் இப்போது உங்களிடம் உள்ள அறிவு.

உங்களுடைய அறிவு என்ன சொல்லுகின்றதோ அதைத்தான் நீங்கள் செய்வீர்கள் நீங்கள் செய்கின்ற செயலின் அடிப்படையில் தான் உங்கள் வாழ்க்கை அமையும், எனவே அறிவியலின் படி நீங்கள் பார்த்த நிகழ்வுகளும், கேட்ட செய்திகளும், உங்களை உங்கள் அனுமதி இல்லாமலே வழி நடத்தும், அல்லது உங்களை செயல்படுத்தும். இதில் இருந்து எந்த ஒரு மனிதனுக்கும் விதிவிலக்கு இல்லை, மாணவர்களாக இருந்தாலும் சரி, மகான்களாக இருந்தாலும் சரி அனைவரும் இதற்குக் கட்டுப்பட்டவர்கள்தான்.

முற்றும் துறந்த முனிவர் (அனைத்து ஆசையும் விட்டவர்) தவம் இருந்த போது ஒரு பெண்ணின் நடனத்தைப் பார்க்கக் நேர்ந்ததால் அவர் தவத்தையே கை விட்டு விட்டார் என்று காவியத்தில் கூறப்பட்டுள்ளது. அவர் அந்த நடனத்தைப் பார்க்காமல் இருந்திருந்தால் அவர் இருந்த தவம் நிறைவுப் பெற்று வரம் கிடைத்து இருக்கும். முற்றும் துறந்த முனிவரே பார்க்க கூடாததைப் பார்த்ததால் அவர் தவம் கெட்டுவிடும்போது. அனைத்துக்கும் ஆசைப்படுகின்ற சராசரி மனிதனை இதுபோன்ற கெட்ட செயல்கள் எந்த அளவுக்கு பாதிக்கும் என்று எண்ணிப் பாருங்கள். எனவே இப்போது வருகின்ற பல திரைப்படங்கள், நாடகங்கள், செய்திகள், விளம்பரங்களைப் பார்க்காமல் இருப்பது நல்லது, அதுபோல், ஒழுக்கம் இல்லாதவர்கள், மது அருந்துபவர்களிடமும் பழகாமல் இருப்பதும் நல்லது, நமது நட்பு வட்டத்துக்குள் யார் இருக்கின்றார்களோ. அவர்களைப் போல்தான் நம் வாழ்க்கை இருக்கும். அவர்கள் எந்த வார்த்தையை பயன்படுத்துகின்றாறோ அதேவார்த்தையைதான் நாமும் பயன்படுத்துவோம், அவர்கள் எந்த பொருளை

வாங்குகின்றாரோ அதே பொருளைத்தான் நாமும் வாங்குவோம். அவர்கள் தர்மம் செய்தால் நாமும் தர்மம் செய்வோம். அவர்கள் கஞ்ஞனாக இருந்தால் நாமும் கஞ்சனாக இருப்போம் இது இயல்பு.

நீங்கள் மாற வேண்டும் என்றால் உங்கள் நட்பு வட்டத்தை மாற்றுங்கள் நீங்கள் தானாகவே மாறிவிடுவீர்கள். நீங்கள் எப்படி வாழ விரும்புகிறீர்களோ அதற்குப் பொருத்தமான நட்பு வட்டத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் விரும்பிய வாழ்க்கை உங்களுக்குக் கிடைக்கும்.

ஒழுக்கம் என்பது ஓட்டை இல்லாத பானை அதன் உள்ளே நாம் சேகரிப்பது தான் கற்கின்ற கல்வி என்கின்ற குடிநீர். இந்த நீர் நமக்குப் பயன்பட வேண்டும்மென்றால் ஒழுக்கம் என்கின்ற ஓட்டை இல்லாத பானை நமக்கு தேவை. ஒழுக்கம் இல்லாமல் நாம் எவ்வளவு பெரிய கல்வியை கற்றாலும் அது யாருக்கும் பயன்படாது. பல மாணவர்கள் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்று டாக்டர், பொறியாளராகப் படித்தாலும் அவர்களிடம் ஒழுக்கம் இல்லாததால் அவர்கள் வாழ்க்கை சீர் அழிந்து போவதை நாம் சமுதாயத்தில் பார்க்கின்றோம். அறிவை அறிவால் ஆளுமை செய்தால் (கெட்டதை கேட்காமல் கெட்டதை பார்க்காமல் இருந்தால்) அனைவரும் ஒழுக்கமானவர்கள்தான்.

நம் அறிவுக்கு எதைத் தெரியப்படுத்த வேண்டும். எதைத் தெரியப்படுத்தக் கூடாது என்பதை அறிந்து, அறிவை அறிவால் வழி நடத்துவதுதான் ஏழாவது அறிவு.
பல ஆயிரம் முறை பெற்றோர்களும், ஆசிரியர்களும், கூறியதைக் கேட்காத மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும்

இந்தப் புத்தகம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும், அதன் மூலம் அவர்கள் வாழ்க்கை இன்பமானதாக அமையும், என்று வாழ்த்துகின்றேன்.

# காதல்

உண்மையான காதல் மனிதனிடம் நாகரிகம் உருவாவதற்கு முன்பு வரைதான் இருந்திருக்கும். நாகரிகம் தான் காதலுக்கு எதிரி, நாகரிகம் வளரவளர உண்மைக் காதல் சமுதாயத்தில் இருந்து மறைந்துகொண்டு தான் இருக்கும், இதுதான் நாகரிகம்.

காதல் திருமணம் அதிகரிப்பது நாகரிகத்தின் வளர்ச்சி என்பது தவறான கருத்து, தவறான பார்வை, இது அநாகரிகத்தின் ஆரம்பம்.

உண்மைக் காதல் என்பது ஒருவர் மீது ஒருவர் வைக்கும் அன்பு. சாதி, மதம், பதவி, செல்வம், கல்வி, அழகு, இது எதையும் பார்க்காமல் கண்டதும் வருவதுதான் உண்மையான காதல் .. இது நாகரிகம், ஒழுக்கம், இல்லாத சமுதாயத்தில் தான் சாத்தியம்.

சாதி, மதம், பதவி, செல்வம், கல்வி அழகு, வயது, திருமணம் ஆகாதவர் என்பதைப் பார்த்து நாம் ஒருவரைக் காதலிக்கலாம் என்று நினைப்பது என்பது தீர்மானம். தீர்மானம் என்பது இது சரி, என்று முடிவு செய்த பிறகு அதன் வழி நடப்பது, இது நாகரிகத்தின் வளர்ச்சி.

நாகரிகம் என்பது சமுதாயத்தைப் பாதிக்காமல் உறவுமுறையுடன் வாழ்வது. அதாவது ஒருவனுக்கு ஒருத்தி என்ற பகுத்தறிவுடன் கணவன், மனைவி, அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, தங்கை, மகள், மகன் அண்ணன் மனைவி,

தம்பி மனைவி, அக்காள் மகள், மாமன் மகள், என்று இப்படி பல உறவுமுறைகளை வைத்து, இதில் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு மாதிரியான நட்பையும், அன்பையும், பாசத்தையும், வெளிபடுத்துகின்றோம். இது தான் நாகரிகம்.

உறவு தெரியாமல் உறவு வைத்துக் கொண்டால் அது அநாகரிகம், எனவே கண்டதும் காதல் என்பது எப்படி நாகரிக மனிதனின் பகுத்தறிவுச் செயலாக இருக்கும்.

உண்மைக் காதல் என்பதன் பொருள் யாரை வேண்டுமானாலும் காதலிப்பது, இது நாகரிகமா, அநாகரிகமா சிந்தியுங்கள்.

ஒருவன் ஒரு பெண்ணைத்தான் காதலிக்கவேண்டும் என்பது காதலின் இலக்கணம் அல்ல. ஒருவன் ஒருத்தியைத் தான் காதலிக்கவேண்டும் என்பது நாகரிக சமுதாயத்தின் ஒழுக்கம். இது பகுத்தறிவின் வெளிப்பாடு.

நாம் ஒவ்வொருவரும் நாகரிகமாகத் தான் வாழ விரும்புகிறோம். இருப்பினும் நம்மில் சிலர் உணர்வைக் கட்டுக்குள் வைக்காமல், ஒரு பெண்ணையோ, ஒரு ஆணையோ தன் துணையாகத் தானே தேர்ந்து எடுப்பதைக் காதல் என்று சொல்கிறார்கள். இதன் பெயர் காதல் அல்ல, உறவுகளைப் பொருட்படுத்தாமல் தானேப் மேற்கொண்ட செயல்தான் இது. இது உண்மைக் காதல் என்றால் அவர் நாகரிகம் இல்லாத கற்கால மனிதர், அல்லது உறவையும், சமுதாயத்தையும் மதிப்பவர் அல்ல என்று தான் பொருள்.

காதல்உணர்வை கட்டுப்படுத்துவதுதான் நாகரிகம். நாகரிகம் வளரவேண்டும் என்றால், காதல் உணர்வு கட்டுக்குள் இருக்கவேண்டும்.

கட்டுப்பாட்டுக்குள் இருப்பது உண்மைக் காதல் அல்ல! கட்டுப்பாட்டுக்குள் இருப்பது நாகரிக காதல் தான், நாகரிகக் காதல் என்பது திருமணத்திற்குப் பிறகு கணவன், மனைவிக்குள் ஏற்படும் காதல் தான்.

அறிவை அறிவால் ஆளுகின்ற ஏழாவது அறிவை இளைஞர், இளைஞிகள் பயன்படுத்தினாள் திருமணத்திற்கு முன் காதல் செய்யமாட்டார்கள்.

மிருகமாக இருந்த மனிதனை, பகுத்தறிவு மனிதனாக மாற்றியது நாகரிகக் காதல் தான். இனி உண்மைக் காதல் என்று சொல்லி கொண்டு மீண்டும் மிருகமாகக் அலையாமல் உறவுகளையும், சமுதாயத்தையும் மதித்து மனிதனாக வாழவேண்டும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு காதல் என்பதை சமுதாயத்தில் ஒழுக்கக் கேடான செயலாகதான் பார்த்தார்கள்.

கடந்த முப்பது ஆண்டுகளாகப் பொது வாழ்விலும், அரசியலிலும், சினிமாத்துறைகளிலும், ஒழுக்கம் இல்லாதவர்கள் ஆதிக்கம் அதிகமாகி விட்டதால், அவர்கள் தன் தவறை மறைக்க முற்போக்குச் சிந்தனை, பகுத்தறிவு என்ற போர்வையில், திருமணத்திற்கு முன் காதல் என்பதை புனிதமாக்கிவிட்டார்கள். இதைப் பயன்படுத்திக் கொண்டு இளைஞர், இளைஞிகள் பலர் காதல் என்று சொல்லிக்

கொண்டு காம வெறியுடன் அலைகின்றார்கள். இந்தச் செயலுக்கு இடையூறாக யாரவாது இருந்தால், காவல்துறை எங்களைப் பாதுகாக்கவில்லை என்று சொல்லி, காதல் தியாகிகளாகி விடுகின்றார்கள். பாவம்! இதனால் தான் காவல்துறையினர்க்கு ........ என்று இளைஞர்கள் பெயர் வைத்தார்களோ?

உண்மைக் காதல், உணர்வை அடிப்படையாகக் கொண்டது, நாகரிகக் காதல் அறிவை அடிப்படையாகக் கொண்டது.

காதல் என்பது உணர்வில் ஆரம்பித்து அறிவில் முடியும். ஆம் காதலித்த பிறகுதான் நாம் தப்பு செய்துவிட்டோம், என்று எண்ணி வருந்துவார்கள்.

நாகரிகக் காதல் என்பது அறிவில் ஆரம்பித்து உணர்வில் முடியும், ஆம் பெரியவர்களால் எது சரி எது பொருத்தமான உறவு, என்று பலமுறை யோசித்த பிறகு நடக்கும் திருமணத்திற்குப் பிறகு ஏற்படும் காதல், உணர்வில் வாழும். இது தான் முழுமையான நாகரிகக் காதல், இது தான் சமுதாயத்தில் ஒழுக்கத்தைக் காக்கும். ஒழுக்கமான சமுதாயத்தில் தான் அமைதி இருக்கும்.